LIBRARY
17 MAR 1967
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Tuesday, 8th November 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER: The Hon. Minister for Food has requested that his questions may be taken up first. So, let us take up his questions first. Question No. 511.

THE HON. SRI V. RAMAIAH: Sir, I would like this question to be taken up tomorrow, as I have to revise the answer already prepared for this question.

MR. SPEAKER: All right. Let us take up question No. 512.

தரிசு நிலங்கள்

*512 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து:
திரு. எம். எஸ். மணி: } கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தரிசு நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவருவதற்கான புதிய திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

கனம் திரு. வெ. ராமையா: (அ) & (இ) விவர அறிக்கை * ஒன்று சபை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. து. ப. அழகமுத்து: சபை முன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் மாவட்டங்களிலுள்ள தரிசு நிலங்களைப் பெறுவதற்கு விண்ணப்பம் 25—8—1965-ம் தேதி அறிவிக்கப்பட்டபடி 1966 ஜனவரி மாதம் வரை கொடுக்கலாம் என்றிருக்கிறது. இதுவரை எவ்வளவு பேர்கள் விண்ணப்பம் போட்டிருக்கிறார்கள்? இதுவரை எவ்வளவு நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. வெ. ராமையா: இந்த விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன்: சார், இந்த தரிசு நிலங்களாக இருப்பனவற்றை ராணுவத்திலுள்ளவர்களுக்கு முதல் சலுகை கொடுப்பதற்கு உத்தேசம் உண்டா?

---

* 698–715-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[8th November 1966

கனம். திரு. வெ. ராமைய்யா: அவர்களுக்கு ப்ரயாரிட்டி கொடுக்கப்படுகிறது.

திரு. எம். எஸ். மணி: திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ராணுவத்தினர் 20 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியும் இதுவரை நிலம் கிடைக்கவில்லை. அதிகாரிகளைக் கேட்டால் எங்கே தரிசு நிலங்கள் இருக்கிறது என்று அவர்களையே பார்த்துவந்து சொல்லும்படி சொல்லுகிறார்கள். ஆகையால், ராணுவத்திலே உள்ளவர்களுக்கு சீக்கிரமாக நிலத்தைக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: எங்கெங்கே நிலங்கள் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் ராணுவத்தில் இருக்கக்கூடியவர்களுக்கும், நிலம் இல்லாத ஏழை ஹரிஜனங்களுக்கும், சமீபத்தில் வந்த பர்மா ரிபாட்ரியேட்களுக்கும் அரசாங்கத்திற்கு நிலம் தேவையில்லாமல் இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு லீசில் விடுவார்கள் அல்லது அசைன்மென்ட் செய்வார்கள்.

திரு. செ. மாதவன்: இந்தத் திட்டம் சில குறிப்பிட்ட இடங்களில் மட்டும் மேற்கொள்ளப்படுகிறதா? அல்லது, ஒவ்வொரு மாவட்டத்திலே உள்ள நிலங்கள் இந்தத் திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்படுகின்றனவா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இருக்கிற பல திட்டங்களில் இது ஒரு திட்டம். கவர்ன்மெண்ட் ஆப் இண்டியா 500 ஏக்கர் நிலப் பரப்புள்ள குறிப்பிட்ட இடங்கள் இருந்தால், அதை ஒரு ப்ளாக்காகச் செய்து காலனி ஆக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தமட்டில் 500 ஏக்கர் அளவுள்ள நிலங்கள் ஒரே இடத்தில் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகையால், இந்தத் திட்டத்தைக் கொஞ்சம் மாடிபை செய்து 250 ஏக்கர் அளவுள்ள நிலங்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்ந்தெடுத்து அங்கே காலனியை அமைக்க வேண்டும் என்பது திட்டம்.

திரு. து. ப. அழகமுத்து: ஒவ்வொரு மாவட்டத்திலும் நிலமற்றவர்களுக்குக் கொடுக்கப்படுகிற நிலங்கள் எந்தக் கால அளவிற்குள்ளே கொடுக்கவேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது? நீண்ட காலதாமதம் ஆகுமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: காலவரையறை ஒன்றும் இல்லை. எங்கெங்கிருந்து அப்ளிகேஷன் வருகிறதோ, எங்கெங்கே சாத்தியமோ அவற்றையெல்லாம் அதிகாரிகள் அவ்வப்போது பார்வையிட்டுச் செய்வார்கள்.

திரு. எம். எஸ். செல்வராஜன்: பயிர் செய்வதற்கு, ஜாரி செய்ய தகுந்த நிலங்கள் போதுமானதாக இல்லை. நிலம் தேவையானவர்களின் தொகை அதிகமாக இருக்கிறது. ஆகையால், 10 ஏக்கர் புஞ்சை, 5 ஏக்கர் நஞ்சை என்ற விகிதத்தைக் குறைத்தாவது கூடு

8th November 1966]

மானவரை பலருக்கு நிலங்களைக் கொடுப்பதற்கு வழிவகை செய்திருக்கிறார்களா ? அல்லது, அப்படிச் செய்ய வழிவகை செய்ய முடியுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : சில இடங்களில் 5 ஏக்கர் 10 ஏக்கர் ஏக்கர் கொடுக்க முடியும். சில இடங்களில் ஒன்றிரண்டு ஏக்கர் கொடுப்பது சாத்தியமாக இருக்கலாம். அதை அரசாங்கம் கவனித்துத்தான் செய்கிறது.

திரு. எம். எஸ். மணி : மேஜையின் மீது வைக்கப்பட்டுள்ள பதிலில் திருச்சி மாவட்டத்தில் 3592.02 ஏக்கர் நிலம் இருப்பதாகத் தெரிகிறது. அந்த நிலங்களினுடைய சர்வே நம்பர்களையும் வெளியிட்டால்தான் நிலம் இல்லாதவர்கள் விண்ணப்பம் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகையால் அவைகளை வெளியிடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அங்கு இருக்கக்கூடிய டிமாண்டைப் பொருத்தது. அங்கே இருக்கிறவர்கள் ஜாக்கிரதையாகப் பார்த்துச் செய்கிறார்கள். அதற்கு மேல் அவசியம் ஏற்பட்டால் பார்த்து செய்யலாம்.

*513 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம், வானூர், கிளியனூர், மரக்காணம் பிர்க்காக்களில் உள்ள பஞ்சம தரிசுகள் எவ்வளவு ?

(இ) அவைகளில் பஞ்சமர்கள் (ஆதி திராவிடர்கள்) வசம் உள்ள பஞ்சம தரிசு எவ்வளவு ?

(உ) மீதமுள்ள பஞ்சம தரிசு யாருடைய வசத்தில் இருக்கின்றன ?

(எ) பஞ்சமர்களுக்கு ஒதுக்கப்பட்ட பஞ்சம தரிசு பூராவும் பஞ்சமர்களுக்கு இதுவரைக்கும் பட்டா செய்து கொடுக்காததற்கு காரணம் என்ன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) 514-66 ஏக்கரா புன்செய், 9-56 ஏக்கரா நன்செய்.

(இ) 41-24 ஏக்கரா புன்செய், 4-54 ஏக்கரா நன்செய்.

(உ) 20-53 ஏக்கரா புன்செய் நிலமும் 2-36 ஏக்கரா நன்செய் நிலமும் ஜாதி இந்துக்களின் வசத்தில் உள்ளன. எஞ்சியுள்ள பகுதி தரிசாகக் கிடக்கின்றது.

(எ) பஞ்சமர்கள் இந்த நிலங்களை தங்களுக்கு ஒப்படை செய்து தருமாறு மனுசெய்து கொள்ளும்போது அவர்களுக்கு நில ஒப்படை செய்யப்பட்டு வருகிறது.